# 6 உலக மாற்றத்திற்குள்ளாகும் முயற்சியாண்மை

உலகம் நாளுக்கு நாள் மாற்றத்திற்குட்படுகின்றது. சனத்தொகை சுற்றாடல், மக்களின் தேவைகள் விருப்பங்கள் போன்றன அவற்றுள் சிலவாகும். இவற்றுடன் நவீன தொழினுட்பங்களும் பெருமளவில் மாற்றமடைகின்றன. இன்றைய உலகம் நாளை வேறு வடிவில் காட்சியளிக்கும். இம்மாற்றங்களுக்கு முகங்கொடுப்பதோடு உலகில் அதிக நாடுகளில் தனியாளும், தனிப்பட்ட குழுக்களும் வியத்தகு சாதனைகளை வெளிக்காட்டுகின்றனர். இவற்றை நீங்கள் கண்டும், கேட்டும் இருப்பீர்கள். கீழ்வரும் படங்களில் காட்டப்பட்டிருப்பது பல்வேறு தனிப்பட்டவர்கள் உலகுக்கு அறிமுகப்படுத்திய அவ்வாறான வியத்தகு ஆக்கங்களுள் சிலவாகும்.



உலகில் மாத்திரமன்றி உங்களுடைய பிரதேசத்திலும், கிராமத்திலும் இவ்வாறான புதிய ஆக்கங்களை உருவாக்கக் கூடியவர்கள் உள்ளனர். பல்வேறு வளங்களைப் பயன்படுத்தி அவற்றிற்குப் பெறுமதி சேர்த்து பொருட்களையும், சேவைகளையும் சந்தைக்கு வழங்குபவர்கள் இவர்களே யாவர். கீழ்வரும் படங்களில் பிரதேசத்திலுள்ள பல்வேறு வளங்களைப் பயன்படுத்தி உருவாக்கியுள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் சில காட்டப்பட்டுள்ளன.



இவற்றின் உற்பத்தியாளர்கள் யார் எனப் பார்ப்போம். உங்கள் தேவைகளை நிறைவு செய்யும் சந்தையைப் பற்றிச் சிறிது சிந்தித்துப் பாருங்கள். அங்கு பல கொள்வனவாளர்கள் இருப்பதைப் போல் விற்பனையாளர்களும் பலர் இருப்பார்கள். இப்போட்டிச் சந்தைக்கு ஒவ்வொரு நாளும் திரளும் புதிய உற்பத்தியாளர்கள் பல்லாயிரக் கணக்காகும். ஒரே தேவையை பூர்த்தி செய்யக்கூடிய ஒரே வகையான பொருட்களாக இருந்தாலும் அவற்றைப் பல்வேறு வடிவங்களில் முன்வைப்பார்கள். அவற்றுள் அதிகமானோர் தங்களின் உற்பத்தியில் நவீனத்துவம், கவர்ச்சி, நீடித்த பாவனை போன்றவற்றுடன் முன்வைப்பதனால் அவர்கள் வெற்றியடைவார்கள். இவ்வாறு வெற்றி அடைபவர்கள் புதிய வழியில் சிந்திக்கும், பார்க்கும், செயற்படும் நபர்களாவார். இவர்களையே நாம் **முயற்சியாளர்** எனக் கூறுகின்றோம்.

## முயற்சியாளன்

- ❖ சமூகத்தின் தேவைகளை அறிந்து கொள்வதன் மூலமும்
- ❖ இடர், உறுதியற்ற தன்மை போன்றவற்றிற்கு முகம் கொடுப்பதன் மூலமும்
- ❖ வளங்களை வினைத்திறனும் விளைதிறனும் உடையதாக ஈடுபடுத்துவதன் மூலமும் பொருள் அல்லது சேவையைச் சமூகத்துக்கு வழங்கும் ஒருவரே முயற்சியாளர் ஆவார்.

வணிகத்துறையில் மாத்திரமின்றி பொருளாதாரத்தின் பல்வேறு இடங்களில் பல்வேறு கருமங்களைச் செய்யும் முயற்சியாளர்கள் காணப்படுகின்றனர். இவர்களில் சிலர் பண ரீதியான இலாபத்தை உழைக்கும் நோக்கில் ஈடுபடுவார்கள். சிலர் பண ரீதியான இலாபத்தை நோக்காகக் கொள்ளாமல் சமூகநல நோக்கில் ஈடுபடுகின்றனர். இவ்வகையான முயற்சியாளர்கள் நலன்புரிச் சேவைகளை நோக்காகக் கொண்டு செயற்படுபவர்கள். இவர்கள் எல்லோரும் சமூகத்திற்குப் பொருளை அல்லது சேவையை வழங்குவதற்காகச் செயற்படுபவர்கள் ஆவர். இவர்கள் தாம் வழங்கும் புதிய பொருளில் அல்லது சேவையில் உள்ள விசேடத்துவம் அல்லது புதுமை காரணமாக திறனான முயற்சியாளராக ஆகின்றனர்.

**செயற்பாடு 6.1**


உங்கள் பிரதேசத்தில் பல்வேறு கருமங்களில் ஈடுபடுகின்ற முயற்சியாளர்களைத் தேடியறிந்து பட்டியல் ஒன்றைத் தயாரியுங்கள் அவர்களது நோக்கங்கள், ஈடுபடும் வேலைகள் என்பவற்றுக்கேற்ப வகைப்படுத்துங்கள்.

## 6.1 முயற்சியாண்மைப் பண்புகளும், திறன்களும்

தலைவன் ஒருவன் கொண்டுள்ள சிறந்த இயல்புகள் மற்றும் முயற்சி யாண்மைப் பண்புகள் காரணமாக அந்நிறுவனம் குறுகிய காலத்தில் முன்னேற்றமடைய அவர்கள் வணிகத்தின் அல்லது பொருளாதாரத்தின் முதுகெலும்பாகக் கருதப்படலாம். அவரின் திறன் இம் முன்னேற்றத்தில் பிரதிபலிக்கும். முயற்சியாண்மைத் திறன் உள்ள முயற்சியாளர்களுக்குத் தமது வாழ்நாளில் அதிக இலக்குகளை வெற்றிகரமாக அடைய முடியும். முயற்சியாளர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி அவர்களிடம் காணப்படக்கூடிய முயற்சியாண்மைப் பண்புகள் பலவற்றை அறிந்து கொள்ளலாம். அவற்றுட் சில பின்வருவனவாகும்.

### புத்தாக்கத்திறன்

முயற்சியாளரொருவரின் ஆக்கத் திறனின் பெறுபேறாக அமைவது புத்தாக்கத்திறன் ஆகும். போட்டியில் வெற்றியீட்டுவதற்கும் சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கும் பாரிய பிரதிகூலங்களை இல்லாதொழிப்பதற்கும் புத்தாக்கத்திறன் மிக முக்கியமாகும். இதனை மேலும் கற்பதற்குப் பின்வரும் உரையாடலைப் பார்ப்போம்.





சரி, சரி மகேஷ் நாங்கள் இருவரும் முன்வருவோம். ஆனால், இம்முறை வெற்றி பெற வேண்டும் என நினைத்துக் கொண்டு போட்டியில் ஈடுபட வேண்டும். சென்ற முறை போட்டி நிகழ்ச்சியில் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்ட ரியாஸைப் பற்றி உனக்கு நினைவிருக்கிறதா?



ஏன் எனக்கு ஞாபகமில்லாமல் அவருடைய செயற்பாட்டைப் பற்றித்தான் எல்லோரும் கதைத்துக் கொண்டோமே! சுரேஷ் நாங்கள் போய் ரியாஸைச் சந்தித்து சில அறிவுரைகளைப் பெற்றுக் கொள்வோம்.





ரியாஸ் இம்முறை பாடசாலையின் செயன்முறைத் தொழினுட்பத்திறன் ஆக்கப் போட்டியில் நாங்கள் இருவரும் ஈடுபடுகின்றோம். அதற்காக உங்களின் அறிவுரைகளை எதிர்பார்க்கிறோம். நீங்கள் போட்டியில் வெற்றியீட்டும் இரகசியம் என்ன?



நீங்கள் இருவரும் போட்டியில் பங்குபற்றுகின்றமை குறித்து மிக்க மகிழ்ச்சி. நான் எப்போதுமே புதுமையை விரும்புபவன். எனவே பார்ப்பவரது இரசனையைத் தூண்டக்கூடிய புதிய படைப்பொன்றை உருவாக்க முனைந்தேன். மாற்றமுறும் உலகில் பழமையானவற்றை மக்கள் விரும்ப மாட்டார்கள். திறன்மிகு புத்தாக்கங்களையே மக்கள் விரும்புகிறார்கள். எனவே பார்வையிடுவோரைக் கவரக்கூடிய புதிய வடிவிலான ஆக்கமொன்றினைச் செய்ய நான் நினைத்தேன். இதன் அடிப்படையில்

- ஆக்கத்திற்கான திட்டத்தைத் தயாரித்தேன்.
- சூழலில் உள்ள கழிப்பொருட்களைத் தெரிவு செய்தேன்.
- கவர்ச்சிகரமான அலங்கரிப்புக்காக நிறங்களைப் பயன்படுத்தினேன்.
- பழமையான முறைமைக்கு மாறாக புதுமையை முன்வைத்தேன்.

இதனால்தான் அதிகமானோர் எனது ஆக்கத்தைச் சுற்றி வர நின்று கூடுதலான நேரம் இரசித்துக் கொண்டிருந்தார்கள். இம்முறை நான் இன்னும் வித்தியாசமான முறையில் ஆக்கமொன்றினைச் செய்வதற்குத் திட்டமிட்டுள்ளேன்.

ரியாஸின் நடத்தையிலிருந்து நாம் விளங்கிக் கொள்வது என்னவென்றால் அவர் எப்போதும் புத்தாக்க வழிவகைகளில் சிந்திக்கும், பார்க்கும், செயற்படும் ஒருவராக இருக்கிறார் என்பதாகும். சிறந்த சிந்தனாசக்தி, ரியாஸிடம் காணப்படுகின்றது. இது புத்தாக்கத்திறனாகும். வணிகங்களில் ஈடுபடும் முயற்சியாளர்கள் இவ்வாறான நவீன ஆக்கத்திறன்களை உபயோகித்து உன்னதமான அமைப்பிலே புதிதாக வடிவமைக்கப்பட்டவைகளைச் சந்தைக்கு வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர்களைக் கவர்ந்தெடுக்க முடிகின்றது. புதுமைப் போக்கிற்கேற்ப உபாயங்களை மேற்கொண்டு விற்பனையை அதிகரித்துக் கொள்கிறார்கள். புதிய நுட்பங்களைப் பயன்படுத்தி சந்தை இடர்களைக் குறைத்துக் கொள்வதன் மூலம் போட்டிக்கு முகம் கொடுத்து கூடுதலான இலாபத்தினையும் ஈட்டிக் கொள்ள முடிகின்றது.

## இடர்களுக்கு முகங்கொடுக்கும் திறன்

இடர்களுக்கு முகம் கொடுத்தல் முயற்சியாளனின் முக்கிய அடிப்படை விடயமாகும். முயற்சியாளனுக்கு இலாபம் கிடைத்தல் அல்லது கிடைக் காமலிருத்தல் தொடர்பாக நிச்சயத்தன்மை இல்லை. இடர்களைக் கணித்து அசாத்தியமானவற்றிலிருந்து விலகி, சாத்தியமானவற்றைச் செயற்படுத்துவதனால், அதிக அனுகூலங்களைப் பெறக்கூடியதாக இருப்பதோடு, பிரதிகூலங்களைக் குறைத்துக்கொள்ளவும் முடிகிறது.

முயற்சியாளர் ஒருவர் இடர்களை எதிர்கொள்ள நேரிடும் சந்தர்ப்பங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

- தனது பணத்தை முதலீடு செய்தல்
- புதிய ஆக்கமொன்றினைச் சந்தைக்கு அறிமுகம் செய்தல்
- செயற்பாட்டிலுள்ள உற்பத்தி முறைகளை மாற்றி வேறு உற்பத்தி முறைகளைத் தெரிந்தெடுத்தல்
- பாரிய களஞ்சிய முறைகளைக் கொண்டு நடாத்துதல் (செயற்படுத்துதல்)
- இயந்திரங்கள் உபகரணங்களின் உதவியுடன் வேலை செய்தல்.

அனைத்து சந்தர்ப்பங்களிலும் நிச்சயமற்ற அனுகூல, பிரதிகூல தன்மைகள் இருக்கின்றன. இந்த அனுகூல, பிரதிகூலத் தன்மைகள் பற்றி வெவ்வேறாக கவனத்தில் எடுத்து கூடிய அனுகூலம் தரக்கூடியதும் குறைந்த பிரகூலங்களை உண்டு பண்ணக்கூடியதுமான வழிவகைகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் வெற்றிகரமாக இடர்களுக்கு முகம் கொடுக்க முடியும்.

### செயற்பாடு 6.2

நீங்கள் சிற்றளவு வணிகத்தை ஆரம்பித்து சேமித்துக் கொண்ட ரூபா 25,000ஐ இலாபகரமான வகையில் முதலீடு செய்யத் திட்டமிட்டுக் கொண்டிருக்கும்போது உங்களுக்கு சில தகவல்கள் கிடைத்துள்ளன.

| | 3 மாதம் | 6மாதம் | 12மாதம் |
|---|---|---|---|
| வணிக வங்கியொன்றில் சேமிப்புக் கணக்கில் 8% வட்டிக்கு முதலீடு செய்தல் | 26000 | 27040 | 29203 |
| திறைசேரி உண்டியலில் முதலீடு செய்தல் | 26250 | 27500 | 30000 |
| பங்குச் சந்தையில் முதலீடு செய்தல் | 26500 | 25000 | 36000 |

வணிக வங்கியின் வட்டியானது திறைசேரி உண்டியலிருந்து கிடைக்கும் வட்டியை விடக் குறைவு. வணிக வங்கிகளிலிருந்து எந் நேரத்திலும் பணத்தை மீளப் பெற முடியும். முதலீட்டு வழிகள் இரண்டும் பாதுகாப்பானவை. பங்குச் சந்தையில் பங்குகளின் விலை எப்பொழுதும் கூடிக்குறையும் தன்மை உடையது. இதனால் கிடைக்கக்கூடிய இலாபம் கூடிக்குறைந்து காணப்படும். இம்முதலீட்டு முறை மூன்றிலும் இடரைக் கருத்திற் கொண்டு உங்கள் பணத்தை முதலீடு செய்வதற்குப் பொருத்தமான முறையினைத் தெரிவு செய்க.

## தீர்மானம் எடுக்கும் திறன்

தீர்மானம் எடுக்கும் திறன் சிறந்த தலைமைத்துவத்துடன் கூடிய முயற்சியாளரிடமுள்ள விசேட குணாதிசயமாகும். தான் தலைமைத்துவம் வகிக்கும் வணிகத்தில் அல்லது நிறுவனத்தின் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கும் தனது இலக்கை அல்லது குறிக்கோளை அடைவதற்கும் இது மிகவும் உறுதுணையாக இருக்கும்.

### கந்தையா முதலாளியின் கதை

ஐயா, நான் எனது தொழிலாகச் செய்தது இடியப்ப வியாபாரமாகும். காலையில் தொழிலுக்குச் செல்பவர்கள் எல்லோரும் எனது கடைக்கு வந்து இடியப்பம் சாப்பிட்டுவிட்டுத்தான் செல்வார்கள். எனினும், நான் எதிர்பார்த்தது போன்று அவ்வியாபாரத்தைச் செய்ய முடியாது போய்விட்டது. ஒவ்வொரு நாளும் இடியப்பம் மீதமாகியது. இதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து பார்த்தேன்.

- ❖ காலையில் அவசர அவசரமாக வேலைக்குப் போகின்றவர்களுக்கு, சாப்பிட்டுவிட்டுச் செல்வதற்கு நேரம் போதாமை.
- ❖ விற்பனை நிலையத்திலுள்ள உணவு பரிமாறும் பீங்கான், கோப்பைகள் தூய்மையாக இருக்குமா என பலருக்கு நம்பிக்கையின்மை.

இவை இரண்டிற்குமான தீர்வாக இடியப்பத்தை 10,15,20 எனப் பொதி செய்து விற்றேன். தொழில்புரியும் இடங்களுக்குக் கொண்டு சென்று சாப்பிட முடியும் என்பதனால் இவ்வாறு செய்தேன். இச்செயற்பாட்டால் அனைத்து இடியப்பபங்களும் விற்கப்பட்டன. எனது இலக்கையும் தாண்டி வருமானம் அதிகரித்தது.

கந்தையா முதலாளி தூர சிந்தனையோடு பொருத்தமான முறையில் தீர்மானம் எடுத்ததால் வெற்றியடைந்தார் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.

- ❖ தீர்மானமெடுக்கும் செயற்பாடு உண்டு என்றும்
- ❖ பொருத்தமான தீர்மானம் எடுப்பதால் வெற்றி உண்டு என்றும்
- ❖ பிரச்சினைகளுக்கான நல்ல தீர்வு, சரியான தீர்மானம் எடுத்தல் எனவும் குறிப்பிடமுடியும்.

கந்தையா முதலாளியைப் போன்று பல்வேறுபட்ட நபர்களுக்கு பல்வேறுபட்டதுறைகளில் பிரச்சினைகள் ஏற்படக்கூடும். எனவே, பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய முறைகளை நாங்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

## செயற்பாடு 6.3

நீங்கள் பலவருடங்களாகச் சுயதொழிலாகத் தையல் தொழிலை நடாத்தி வரும் ஒருவராக நினைத்துக் கொள்ளுங்கள். உங்களிடமிருப்பது கால்களினால் இயக்கும் தையல் இயந்திரமாகும். மின்சாரத்தில் இயங்கும் தையல் இயந்திரமொன்றை வாங்குவதால் உற்பத்தியை அதிகரித்து சிரமத்தைக் குறைத்து கொள்ள முடியும் என நண்பர்கள் கூறுகிறார்கள். இப்படியான சந்தர்ப்பத்தில் நீங்கள் எடுக்கும் தீர்மானம் என்ன? கீழ்க்காணும் அட்டவணையைப் அவதானித்துத் தீர்மானியுங்கள்.

தீர்மானம் எடுக்கும் வழிமுறை

↓

மின்சாரத்தில் இயங்கும் தையல் இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தல்

↓

கால்களால் இயங்கவைக்கும் இயந்திரத்தைத் தொடர்ந்து பாவிப்பதிலுள்ள நன்மை தீமை பற்றித் தகவல்கள் திரட்டுதல்

மின்சாரத்தின் உதவியுடன் இயங்கக் கூடிய இயந்திரமொன்றின் மூலம் கிடைக்கும் நன்மை, தீமைகள் பற்றித் தகவல்கள் திரட்டுதல்

↓

ஆகக்கூடுதலான நன்மைகளை பெறுவதுடன் குறைந்த பிரதிகூலங்களை ஏற்படுத்தும் செயன்முறையைத் தேர்ந்தெடுத்தல்

↓

தெரிவு செய்த செயற்பாட்டு முறையைச் செயற்படுத்துதல்

↓

நீங்கள் எடுக்கும் நடவடிக்கை சரியானதா என்று மீண்டும் மதிப்பீடு செய்து பாருங்கள்.

## பொறுப்பும் அர்ப்பணிப்பும்

பின்வரும் படத்தைப் பாருங்கள். சிற்றளவு வணிகத்தை ஆரம்பித்து நல்ல முன்னேற்றத்தைக் கண்டுகொண்டதும் நல்ல முயற்சியுள்ளதுமான முதலாளியையே இங்கு காண்கிறீர்கள். இவர் பொறுப்புணர்ச்சியுடனும் அர்ப்பணிப்புடனும் தனது வணிகத்தில் ஈடுபட்டமையினாலேயே இந்நிலைமைக்கு வந்திருக்கிறார் என கிராம மக்கள் கூறுகின்றனர். இப்பொழுது இந்த முதலாளியிடம் பொறுப்பு, அர்ப்பணிப்பு பற்றி கேட்டறிந்து கொள்வோம்.

முதலாளி : பொறுப்பென்று சொல்வது தனது செயற்பாடுகளுக்குரிய ஊழியர்கள், சமூகம், நுகர்வோர் என்போர் மீதுள்ள அக்கறையாகும்.




- ❖ வாடிக்கையாளர்களின் தேவைகளையும், விருப்பங்களையும் இனங்கண்டு அவற்றைப் பூர்த்தி செய்தல்.
- ❖ வாடிக்கையாளர்களுடன் நேர்மையாகவும் நியாயமாகவும் நடந்து கொள்ளல்
- ❖ சுற்றாடலுக்குத் தீங்கு விளைவிக்காதிருத்தல்.
- ❖ சமூகத்திற்கு நன்மை பயக்கும் வகையில் செயற்படுதல்

ரஜீவ் :- அப்படியென்றால் முதலாளி அர்ப்பணிப்பு என்று சொல்வது என்ன?

முதலாளி :- அர்ப்பணிப்பு என்று சொல்வது நேரம், காலம், பாராது தனிப்பட்ட தேவைகளைக் கருத்திற் கொள்ளாது நன்மை, தீமைகளைக் கருதாது வணிகச் செயற்பாடுகளைக் குறைவின்றிச் செய்வதாகும். நான் சோம்பல் படவில்லை, சலித்துப்போகவில்லை, அதைரியப்படவில்லை எந்த விதமான தடைகள் வந்த போதிலும் முயற்சியைக்கை விடவில்லை. சவால்களுக்கு முகம் கொடுத்து அச்சமின்றி வேலை செய்தேன். இதைத்தான் மகனே அர்ப்பணிப்பு என்று சொல்வது.

## நெகிழ்வுத் தன்மை

தேவிகா அக்காவின் அனுபவத்தின் மூலம் நெகிழ்வுத் தன்மை பற்றி கற்றுக் கொள்வோம்.



அக்கா எனது வகுப்பில் நான் செயன்முறைத் தொழினுட்பத்திறன் பாடத்திற்காக தலைமைத்துவம் சம்பந்தமாக நாடகமொன்றை நடித்துக் காட்ட வேண்டும். தலைமைத்துவத்தில் நெகிழ்வுத்தன்மை பற்றிய விடயங்களைக் கூற முடியுமா?

நான் பணிபுரியும் உற்பத்தி நிறுவனத்தின் முகாமையாளருக்கு இப்பண்புகள் ஏராளமாக உள்ளன. இதனால் இதைப் பற்றிச் சொல்வதில் சிரமமேதும் இல்லை. நாம் வாழும் சூழலில் வேகமாக மாறிச் செல்லும் தொழினுட்ப விருத்தி, வருமான நிலை உயர்வு, மக்களின் எண்ணங்களும் கருத்துக்களும் மாற்றமடைதல், கல்வி நிலை உயர்வு போன்ற காரணங்களால் மனிதத் தேவைகளும் வேகமாக மாற்றமடைகின்றன. இவைபற்றி விளிப்புடன் இருந்து சந்தர்ப்பத்திற் கேற்ற வகையில் நெகிழ்வுடன் எங்கள் முகாமையாளர் நடந்து கொள்கிறார்.



இவை மாத்திரமா அக்கா?




இல்லையில்லை. வாடிக்கையாளர்களின் கருத்துக்களையும் வேண்டுகோள்களையும் செவிமடுக்கிறார். விமர்சனங்களை மதிக்கிறார். அதே போல் பணிபுரியும் பணியாட்களின் கருத்துக்களுக்கும், வேண்டுகோள்களுக்கும் மதிப்பளிக்கிறார். அவர்களின் சுகதுக்கங்களில் கவனஞ் செல்வதோடு அரசின் சட்டதிட்டங்களுக்கும் இணங்கி நிறுவனத்தை நடத்திச் செல்கின்றார். நெகிழ்வுத் தன்மை என்று சொல்வது. சூழல் மாற்றத்திற்கேற்ப தலைமைத்துவம் வகிக்கும் முயற்சியாளரும் மாறிக் கொள்ள வேண்டும். சுருக்கமாக சொல்வதாயின் நெகிழ்வுத் தன்மையென்பது சூழல் மாற்றங்களுக்கேற்ப மாறிக் கொள்வதற்கு முயற்சிப்பதாகும்.



## தலைமைத்துவம்

இளைஞர் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட சிரமதானத்திற்காக நல்ல தலைவரைத் தெரிவுசெய்தல்.

எங்களுடைய இளைஞர் கழகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சிரமதான வேலைகள் தொடர்பான ஒழுங்குகளை கலந்துரையாடுவதற்காகவே நாம் இங்கு கூடியுள்ளோம். இச்சங்கத்தில் தலைவர் என்ற வகையில் இவ்வொழுங்குகளைத் திட்டமிட்டுநடைமுறைப்படுத்த சிறந்ததோர் தலைவர் தேவைப்படுகிறார். எனவே நாம் முதலில் ஒரு தலைவரைத் தெரிவு செய்வோம்.






தலைவர் அவர்களே இம்முறையும் நாங்கள். ரவிசங்கர் ஆசிரியரைத் தெரிவு செய்வோம் ஏனெனில் சென்ற முறை பாடசாலை விளை யாட்டுப் போட்டியை எங்கள் எல்லோரினதும் ஒத்துழைப்பைப் பெற்று இவர் நன்றாகச் செய்தார். பெரியவர் சிறியவர் என்ற பேதமின்றி கிராமத்திலுள்ள எல்லோரினதும் ஒத்துழைப் பைப் பெறுவதில் ஆசிரியர் மிகவும் வல்லவர். அத்தோடு இவருக்கு எல்லோரிடத்திலும் நல்ல மதிப்பும் வரவேற்பும் உண்டு.

இளைஞர் கழக உறுப்பினர்களுக்கும் கிராமத்திலுள்ள எல்லோருக்கும் வேலை களை பகிர்ந்து கொடுத்து, அவற்றை அர்ப்பணிப்புடனும் பொறுப்புணர்வுடனும் செய்யும் முறையை ஆசிரியர் எமக்கு காட்டித் தந்தது மட்டுமல்லாமல் அவரும் அப்படியே செய்து காட்டினார். அனைத்து வேலைகளுக்கும் அவரிடம் திட்டமொன்று இருந்தது. நேரத்திற்கு வேலை செய்தார்.



இந்த பிரேரணை மிகவும் நல்லது. வேறு எவரையும் தெரிவு செய்யும் அபிப்பிராயம் இருந்தால் சந்தர்ப்பம் வழங்க முடியும்.



ஐயோ இல்லை.ரவிசங்கர் ஆசிரியரின் தலைமைத்துவத்தை நாங்கள் எல்லோரும் விரும்புகின்றோம். எந்தப் பிரச்சினை எழுந் தாலும் அவர் தூரநோக்கோடு மிகவும் பொருத்தமான முறையில் முடிவுகளை உடனுக்குடன் எடுக்கும் ஆற்றல் படைத்தவர். அத்தோடு பொறுமையும் எல்லோருடைய கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கக் கூடிய பண்பும் அவரிடம் காணப்படுகின்றது. அதனால் கருத்து முரண்பாடு எதுவும் ஏற்படுவதில்லை. எங்கள் வேலையும் முழுமை பெறும்.



இவ்வுரையாடல் மூலம் ரவிசங்கர் ஆசிரியர் சிறந்த தலைமைத்துவப் பண்புகளை உடையவரென அறியலாம். கீழ்க்குறிப்பிடப்பட்ட பண்புகள் உங்களிடம் உள்ளதா எனச் சிந்தித்துப் பாருங்கள்.

## தலைமைத்துவப் பண்புகள்



- ❖ திட்டமிட்டு வேலைகளைச் செய்தல்.
- ❖ சிறந்த முறையில் ஒழுங்கமைப்புச் செய்தல்.
- ❖ சிறந்த நிர்வாகம்
- ❖ சீராக நிர்வகிக்கும் திறன்
- ❖ மற்றவர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுதல்
- ❖ பொருத்தமான இடத்தில் தகுந்த தீர்மானங்களை எடுத்தல்
- ❖ நெகிழ்வுத் தன்மையுடன் சவால்களுக்கு முகங்கொடுத்தல்
- ❖ தூர சிந்தனையுடன் கூடிய அறிவு
- ❖ பொறுமையும் எல்லோருடனும் இணங்கிச் செயற்படும் தன்மையும்
- ❖ சமூகம் நலம்பெறும் வகையில் செயற்படுதல்

### செயற்பாடு 6.4

நீங்கள் பாடரீதியான செயற்பாடுகளில் ஈடுபடுவதுபோல இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் தலைமைத்துவம் வகித்த சந்தர்ப்பங்கள் பற்றிச் சற்று சிந்தியுங்கள். கீழ்க் காணும் அட்டவணை மூலம் நீங்கள் நடந்து கொண்ட முறையினை ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் உங்க ளிடமுள்ள தலைமைத்துவப்பண்புககளை இனங்காணுங்கள்.

தலைமைத்துவம்

↓

செயற்பாடுகளைச் செய்வதற்குரிய திட்டங்களைத் தயார் செய்து உங்கள் குழுவிலுள்ள அங்கத்தவர்களுக்கு வேலைகளைப் பிரித்துக் கொடுத்ததுண்டா? உங்கள் வேலைகளை எதிர்த்தவர்கள் உங்களுக்கு எதிராக மாற்றுக் கருத்துக்களை முன்வைக்கின்றபோது உங்களுக்கு கோபம், வெட்கம் அல்லது கவலை ஏற்பட்டதுண்டா?

↓

அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் உங்கள் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டீர்களா?

↓

இல்லாவிட்டால் வன்முறைகளில் ஈடுபட்டீர்களா? அப்படி இல்லையென்றால் பொறுமையுடனும், செவிமடுப்பது மூலமும் அவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தீர்களா?

↓

| | | | |
|---|---|---|---|
| உங்கள் தலைமைத்துவம் எல்லோருக்கும் ஏற்புடையதாக இருந்ததா? | பொருத்தமான தீர்மானங்கள் எடுப்பதற்கு உங்களால் முடிந்ததா? | குழு ஒருமைப்பாட்டுடன் கூடிய ஒத்துழைப்பைப் பெற முடிந்ததா? | உங்கள் திட்டம் ஒழுங்கமைப்பு, வழிகாட்டல் நடவடிக்கைகள் போன்றவற்றில்ஆசிரியரின் பாராட்டினைப் பெற்றீர்களா? |

**பல்வேறு வணிக சந்தர்ப்பங்களைத்தெரிவு செய்வதன் மூலமும், வணிக அமைப்புக்களை செயற்படுத்துவதன் மூலமும் முயற்சியாளர்களின் பண்புகளை விருத்தி செய்து கொள்ளல்.**

பல்வேறு வணிகக் கருத்துக்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட வணிகக் கருத்தைச் செயற்படுத்தும்போது அதனை நிறைவேற்றுவதற்காக தெரிவு செய்யப்படக்கூடிய பல்வேறு வணிக அமைப்புக்கள் உள்ளன. அவற்றுள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- ❖ தனியுடமை வணிகம்
- ❖ பங்குடைமை
- ❖ வரையறுக்கப்பட்ட தனியார்க் கம்பனி
- ❖ வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி
- ❖ கூட்டுறவுச் சங்கம்

இது பற்றி 8 ஆந் தரத்தில் கற்றிருப்பீர்கள். முயற்சியாளன் வணிக கருத்தினைச் செயற்படுத்தும்போது மிகவும் சிறந்த முறையில் செய்யக்கூடிய வணிக அகவமைப்பு முறையொன்றினைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார். அதன்போது அவர் பல்வேறு செயல்களில் அல்லது விடயங்களில் ஈடுபட நேரிடும். முயற்சியாளனுக்குரிய பண்புகளை விருத்தி செய்து கொள்வற்கு நடைமுறை வணிக அனுபவங்களைப் பெற்றுக் கொள்வது மிக முக்கியமாகும்.

வணிகத்தின் உரிமையாளராகவும், முகாமையாளராகவும், தலைவராகவும் செயற்படுவதன் மூலம் முயற்சியாண்மைத் திறன்களை வளர்த்துக் கொள்ள முடியும். நபர்களுக்கிடையிலான ஆளிடைத் தொடர்புகளை மேம்படுத்தல், தீர்மானம் எடுக்கும் திறனை ஏற்படுத்தல், திட்டமிடல், வேலையை ஒழுங்கமைத்தல், செயற்படுத்தல், கட்டுப்படுத்தல் போன்றவற்றில் ஈடுபடுவதன் மூலம் இதனை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

உரிமையாளர் எனும் வகையில் பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் வேலையில் ஈடுபட நேரிடும். மற்றையோர்களை விட வணிக நோக்கத்தினை நிறைவு செய்யும் அபிலாசை உரிமையாளருக்கே உண்டு. எனவே, அனைத்து பணியாட்களையும் விட வணிக உரிமையாளர் நிலையத்திற்கு அதிகாலை வருதல், அதிகூடிய நேரம் பொறுப்புடன் செயற்படுதல் போன்றவற்றில் அர்ப்பணிப்பு ஏற்படும்.

வணிக ஒழுங்கமைப்பொன்றின் கீழ் வணிக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதன் மூலம் அவருடைய புத்தாக்கத்திறன்களால் பயனடைவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். அத்தோடு வணிகத்தின் மூலமே பல்வேறு ஆக்கங்களை உருவாக்கக் கூடியதாகவும் உள்ளது.

சந்தையின் நிச்சயமற்ற தன்மை, இடர் நிலைமைகளினைக் கண்டறிதல், அவற்றிற்கு முகம் கொடுக்கும் முறைகள், அவை பற்றிச் சரியான தீர்மானங்களை எடுத்தல், அவற்றைச் செயற்படுத்தும் முறை போன்றன பற்றிய அனுபவம் என்பன வணிகங்களைச் கொண்டு நடாத்திச் செல்லும் பொழுதே கிடைக்கின்றது. இதனால் இடர்களுக்கு முகங்கொடுக்கும் திறன் பற்றிய பண்புகள் வளர்ச்சி பெறும்.